# திருப்பூர் மாநகராட்சி

**2019 மார்ச் மாதம் 04–ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

**524 முதல் 536 வரை**

**07–03–2019 ஆம் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

**537 முதல் 540 வரை**

## திருப்பூர் மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு . க. சிவகுமார் எம்.ஏ.,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

*****

**525)** திருப்பூர் மாநகராட்சி முத்தணம்பாளையம் சாலையில் லட்சுமி நகர் பகுதியில் நல்லூர் கிராமம் க.ச.எண். 581 / 111, 581 / 112, 582 / 9, 588 / 3A2, 588 /2A, 588 / 5A1, 588 /5A2, 588/1B, 588/2B, & 588/3B, 4.84 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க திரு M.P. சாமி மற்றும் 8 நபர்கள் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார்.

மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கையினை பரிசீலித்து உறுப்பினர் செயலர் (பொ) அவர்கள் கடித ந.க.எண். 2054 /2018/திஉதிகு நாள் 16.11.2018–ல் மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யுமாறு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் அனுப்பியுள்ளார்.

இதற்கேற்ப மனுதாரர்கள் மனைப்பிரிவு சாலை, பூங்கா மற்றும் இதர வசதிகள் அமைத்துள்ளனர். மனைப்பிரிவு அபிவிருத்தி கட்டணம் ரூபாய் 15,000/– மின்கம்பம் 17 மற்றும் குடிநீர் குழாய் பதிக்க மொத்தம் ரூபாய் 7,95,000/– மாநகராட்சி கருவூலத்தில் நாள் 11.02.2019 சலான் எண்.032/501/5/18–19/5848–ல் செலுத்தியுள்ளார்.

எனவே உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தின்படி அமைக்கப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்கா இடத்திற்குரிய இடத்தினையும், மாநகராட்சிக்கு தானமாக பத்திர பதிவு எண். 705 / 2019, நாள் 18.02.2019, நல்லூர் அலுவலகம் பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்குதலுக்கு மாமன்ற ஒப்புதல் பெற மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்ற ஒப்புதல் வழங்கலாம். ( இ.1 / 130 / 2019 / ம.3)

------

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.**

-----

**526)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் உள்ள தென்னம்பாளையம் வார சந்தையில் ரூ.12.86 கோடி திட்ட மதிப்பீட்டில் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 17573/2018/IHSDP-3-1, நாள். 14.12.2018 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்ட மேற்படி பணிக்கு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.25477/2017/DO1, நாள். 25.01.2019 வாயிலாக ரூ.12.86 கோடி மதிப்பிட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, 28.02.2019 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் உள்ள தென்னம்பாளையம் வார சந்தையில் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு (மதிப்பீட்டுத் தொகை ரூ.12,86,00,000/-) 28.02.2019 அன்று M/s. ஸ்ரீ சூர்யா கன்ஸ்ட்ரக்சன், ஈரோடு, M/s. ஆர்.ஆர். துளசி பில்டர்ஸ், ஈரோடு மற்றும் M/s. ஜி.எம்.எஸ் எலிஜென்ட் பில்டர்ஸ் இந்தியா (பி) லிமிடெட், ஈரோடு ஆகிய மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தன.

**526–ன் தொடர்ச்சி**

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை திறப்பு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும் இப்பணியை செய்ய தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s. ஸ்ரீ சூர்யா கன்ஸ்ட்ரக்சன், ஈரோடு, M/s. ஆர்.ஆர். துளசி பில்டர்ஸ், ஈரோடு மற்றும் M/s. ஜி.எம்.எஸ் எலிஜென்ட் பில்டர்ஸ் இந்தியா (பி) லிமிடெட், ஈரோடு ஆகிய மூன்று நிறுவனங்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை 01.03.2019 அன்று திறப்பு செய்யப்பட்டு, ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. (GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | M/s. ஸ்ரீ சூர்யா கன்ஸ்ட்ரக்சன், ஈரோடு | 12,83,10,547/- | மதிப்பீட்டு விலையை விட 7.18% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது |
| 2. | M/s. ஆர்.ஆர். துளசி பில்டர்ஸ், ஈரோடு | 13,81,13,036/- | மதிப்பீட்டு விலையை விட 15.36% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது |
| 3. | M/s. ஜி.எம்.எஸ் எலிஜென்ட் பில்டர்ஸ் இந்தியா (பி) லிமிடெட், ஈரோடு | 13,34,77,524/- | மதிப்பீட்டு விலையை விட 11.49% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது |

மேற்படி தொழில்நுட்ப தகுதி பெற்ற மூன்று ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த M/s. ஸ்ரீ சூர்யா கன்ஸ்ட்ரக்சன், ஈரோடு நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். TSCL/E1/6630(III-A)/2017, நாள்: 02.03.2019-ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் தங்களது 02.03.2019-ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.9-ல் ரூ.76-க்கு பதிலாக ரூ.69-க்கு விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s. ஸ்ரீ சூர்யா கன்ஸ்ட்ரக்சன், ஈரோடு | 12,56,45,996/- | மதிப்பீட்டு விலையை விட 4.95% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.95% அதிகமாக இருந்த மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப்பட்டியல் விலை விகிதத்தை விட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.95% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2. கூடுதலாகும் செலவினத்தை ஸ்மார்ட் சிட்டி நிதியில் மேற்கொள்ள உள்ளதை மாமன்றத்தில் பதிவு செய்யலாம். (ந.க.எண். TSCL/E1/6630(III-A)/2017)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-----

**527)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் உள்ள தினசரி மார்க்கெட்டில் ரூ.28.99 கோடி திட்ட மதிப்பீட்டில் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ள தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர், TUFIDCO அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். TUFIDCO / HPPSC / 235 / AM(M) / 2018, நாள். 04.12.2018 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்ட மேற்படி பணிக்கு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை, ந.க.எண்.25477/2017/DO1, நாள். 25.01.2019 வாயிலாக ரூ.28.99 கோடி மதிப்பிட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, 28.02.2019 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் உள்ள தினசரி மார்க்கெட்டில் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு (மதிப்பீட்டுத் தொகை ரூ.28,99,00,000/-) 28.02.2019 அன்று M/s. சிவா இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர், M/s. ஆர்.பி. பெரியசாமி அன் கோ, ஈரோடு மற்றும் M/s. ஜி.எம்.எஸ் எலிஜெண்ட் பில்டர்ஸ் இந்தியா (பி) லிமிடெட், ஈரோடு ஆகிய மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தன.

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை திறப்பு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்த மூன்று ஒப்பந்ததாரர்களில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் மட்டும் இப்பணியை செய்ய தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s. சிவா இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் மற்றும் M/s. ஆர்.பி. பெரியசாமி அன் கோ, ஈரோடு ஆகிய இரண்டு நிறுவனங்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை 01.03.2019 அன்று திறப்பு செய்யப்பட்டு, ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. (GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | M/s. சிவா இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் | 28,38,80,373/- | மதிப்பீட்டு விலையை விட 10.17% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது |
| 2. | M/s. ஆர்.பி. பெரியசாமி அன் கோ, ஈரோடு | 30,43,29,670/- | மதிப்பீட்டு விலையை விட 18.10% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது |

மேற்படி தொழில்நுட்ப தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த M/s.சிவா இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். TSCL/E1/6630(III-B)/2017, நாள்: 02.03.2019-ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் தங்களது 02.03.2019-ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.1-ல் ரூ.123-க்கு பதிலாக ரூ.51-க்கும், இனம் எண்.6-ல் ரூ.180-க்கு பதிலாக ரூ.172-க்கும், இனம் எண்.7a-ல் ரூ.4600-க்கு பதிலாக ரூ.4585-க்கும், இனம் எண்.7b-ல் ரூ.4650-க்கு பதிலாக ரூ.4630-க்கும் இனம் எண்.7c-ல் ரூ.4750-க்கு பதிலாக ரூ.4725-க்கும், இனம் எண்.8-ல் ரூ.630-க்கு பதிலாக ரூ.600-க்கும், இனம் எண்.9a-ல் ரூ.7500-க்கு பதிலாக ரூ.6900-க்கும், இனம் எண்.9b-ல் ரூ.7500-க்கு பதிலாக ரூ.6900-க்கும், இனம் எண்.9c-ல் ரூ.7500-க்கு பதிலாக ரூ.6900-க்கும், இனம் எண்.9d-ல் ரூ.7500-க்கு பதிலாக ரூ.6900-க்கும் மற்றும் இனம் எண்.34-ல் ரூ.70-க்கு பதிலாக ரூ.65-க்கும் விலைக்குறைப்பு செய்து தர சம்மதம்

தெரிவித்துள்ளது. மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s. சிவா இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் | 27,05,26,917/- | மதிப்பீட்டு விலையை விட 4.98% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.98% அதிகமாக இருந்த மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப்பட்டியல் விலை விகிதத்தை விட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.98% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2. கூடுதலாகும் செலவினத்தை ஸ்மார்ட் சிட்டி நிதியில் மேற்கொள்ள உள்ளதை மாமன்றத்தில் பதிவு செய்யலாம். (ந.க.எண். TSCL/E1/6630(III-B)/2017)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-----

**528)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் உள்ள பூ மார்க்கெட்டில் ரூ.4.47 கோடி திட்ட மதிப்பீட்டில் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 17573/2018/ IHSDP-3-2, நாள். 14.12.2018 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்ட மேற்படி பணிக்கு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை, ந.க.எண்.25477/2017/DO1, நாள். 25.01.2019 வாயிலாக ரூ.4.47 கோடி மதிப்பிட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, 28.02.2019 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் உள்ள பூ மார்க்கெட்டில் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு (மதிப்பீட்டுத் தொகை ரூ.4,47,00,000/-) 28.02.2019 அன்று M/s. சிவா இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர், M/s. ஜோதி இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் மற்றும் M/s. ஜி.எம்.எஸ் எலிஜெண்ட் பில்டர்ஸ் இந்தியா (பி) லிமிடெட், ஈரோடு ஆகிய மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தன.

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை திறப்பு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்த மூன்று ஒப்பந்ததாரர்களில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் மட்டும் இப்பணியை செய்ய தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s. சிவா இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் மற்றும் M/s. ஜி.எம்.எஸ் எலிஜெண்ட் பில்டர்ஸ் இந்தியா (பி) லிமிடெட், ஈரோடு ஆகிய இரண்டு நிறுவனங்களின் விலைவிகித

**528–ன் தொடர்ச்சி**

ஒப்பந்தப்புள்ளி உறை 01.03.2019 அன்று திறப்பு செய்யப்பட்டு, ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. (GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | M/s. சிவா இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் | 4,59,64,173/- | மதிப்பீட்டு விலையை விட 10.12% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது |
| 2. | M/s. ஜி.எம்.எஸ் எலிஜென்ட் பில்டர்ஸ் இந்தியா (பி) லிமிடெட், ஈரோடு | 4,96,02,554/- | மதிப்பீட்டு விலையை விட 18.84% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது |

மேற்படி தொழில்நுட்ப தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த M/s. சிவா இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். TSCL/E1/6630(III-C)/2017, நாள்: 02.03.2019-ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் தங்களது 02.03.2019-ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.1-ல் ரூ.123-க்கு பதிலாக ரூ.51-க்கும், இனம் எண்.6a-ல் ரூ.7500-க்கு பதிலாக ரூ.6950-க்கும், இனம் எண்.6b-ல் ரூ.7500-க்கு பதிலாக ரூ.6950-க்கும், இனம் எண்.6c-ல் ரூ.7500-க்கு பதிலாக ரூ.7000-க்கும் மற்றும் இனம் எண்.9-ல் ரூ.70-க்கு பதிலாக ரூ.65-க்கும் விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s. சிவா இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் | 4,38,14,277/- | மதிப்பீட்டு விலையை விட 4.97% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.97% அதிகமாக இருந்த மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப்பட்டியல் விலை விகிதத்தை விட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.97% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2. கூடுதலாகும் செலவினத்தை ஸ்மார்ட் சிட்டி நிதியில் மேற்கொள்ள உள்ளதை மாமன்றத்தில் பதிவு செய்யலாம். **(ந.க.எண். TSCL/E1/6630(III-C)/2017)**

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-----

**529)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சியில் ரூ.27.16 கோடி திட்ட மதிப்பீட்டில் “Design, Supply, Installation & Commissioning of 4.8 Mwp Solar Power Plant at Iduvai Village” பணி மேற்கொள்ள தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், TUFIDCO– அவர்களின் கடித **எண்.**TUFIDCO/HPPSC/235/AM(M)/2018, நாள்.**04.12.2018** வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்ட மேற்படி பணிக்கு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை, ந.க.எண்.25477/2018/DO1, நாள். 18.01.2019 வாயிலாக ரூ.27.16 கோடி மதிப்பிட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, மேற்படி பணிக்கு 25.02.2019 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி திருப்பூர் மாநகராட்சியில் “Design, Supply, Installation & Commissioning of 4.8 Mwp Solar Power Plant at Iduvai Village” பணிக்கு (மதிப்பீட்டுத் தொகை ரூ.27,16,000.00/-) 25.02.2019 அன்று M/s.Espen Enterprises & M/s. SRM Construction, (Consortium), Coimbtaore, மற்றும் M/s.Velohar Infra Pvt Ltd & M/s.GreenTek India Pvt Ltd (Consortium), Chennai ஆகிய இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தன.

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை திறப்பு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்த இரண்டு ஒப்பந்தததாரர்களில் இருவரும் இப்பணியை செய்ய தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s.Espen Enterprises, Coimbtaore, மற்றும் M/s.Velohar Infra Pvt Ltd, Chennai ஆகிய இரண்டு நிறுவனங்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை 27.02.2019 அன்று திறப்பு செய்யப்பட்டு, ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (GST உட்பட)** | **ஒப்பந்தப்புள்ளி விகிதம்** | **வைப்புத்தொகை** |
|---|---|---|---|---|
| 1. | M/s.Espen Enterprises & M/s.SRM Construction, (Consortium) Coimbtaore, | ரூ.25,83,01,071/- | மதிப்பீட்டு விலையை விட 4.62% கூடுதலாகும் | இணைக்கப்பட்டுள்ளது |
| 2. | M/s.Velohar Infra Pvt Ltd & M/s.GreenTek India Pvt Ltd (Consortium), Chennai | ரூ.26,14,29,861/- | மதிப்பீட்டு விலையை விட 5.89% கூடுதலாகும் | இணைக்கப்பட்டுள்ளது |

மேற்படி தொழில்நுட்ப தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த M/s.Espen Enterprises, Coimbtaore, நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். TSCL/E1/6630(XI)/2017, நாள்:27.02.2019-ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் தங்களது 04.03.2019-ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.2-ல் ரூ.1,58,00,400/--க்கு பதிலாக ரூ.1,57,50,000/-க்கு, விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளனர். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

**529–ன் தொடர்ச்சி**

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s.Espen Enterprises, Coimbtaore, | ரூ.25,82,41,599/- | மதிப்பீட்டு விலையை விட 4.60 % அதிகம் |

மேற்படி நிறுவனத்தார் தங்களது கடிதத்தில் மேலும் விலைகுறைப்பு செய்ய இயலாது என தெரிவித்திருந்த காரணத்தினால் விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.60% அதிகமாக இருந்த மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப்பட்டியல் விலை விகிதத்தை விட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.60 % அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். **TSCL/E1/6630 (XI) /2017)**

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-----

**530)** இம்மாநகராட்சி பகுதிகளில் டெங்கு சிக்குனியா மற்றும் மலேரியா காய்ச்சல்களை பரப்பும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5 அவர்களின் கடிதம் ந.க.எண். 1588 / 2015 / ஜே1, நாள் 15.06.2015 மற்றும் கடிதம் ந.க.எண். 2571 / ஜே1 நாள் 15.06.2015 மற்றும் கடிதம் ந.க.எண். 2571 / ஜே1/2017 நாள் 14.02.2017ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட கொசு தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் கொசு புகை மருந்தான "Pyrethrum 2% Extract" என்ற மருந்து டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கு 4மண்டலங்களுக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் விடுபடாமல் காலை, மாலை இருவேளைகளிலும் Indoor மற்றும் Outdoor Fogging Operation பணி மேற்கொள்ள ஏதுவாக மேற்படி மருந்து இருப்பு குறைவாக இருப்பதால் அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு 2018–2019ம் ஆண்டிற்கு தேவைப்படும் மருந்தை தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.015 / M [P] / INSECT – LARVI (II) / TNMSC / 2017 நாள் 14.11.2018ன் படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் "Pyrethrum 2% Extract" மருந்தை 2000 லிட்டர் வாங்க நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.26.00 (GST உட்பட) லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

இம்மாநகராட்சி கொசு தடுப்பு பணிக்கு முதிர்ந்த கொசுக்களை ஒழிக்க கொசுபுகை மருந்தாக பயன்படும் 2000 லிட்டர் Pyrethrum 2% Extract மருந்தை தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம், சென்னை அவர்களின் மேற்கண்ட கடிதத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கவும் மற்றும் அதற்காகும் மேற்கண்ட செலவீனத்திற்கும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். (எச்.1/ 585 / 2019)

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-----

**531)** இம்மாநகராட்சி பகுதிகளில் டெங்கு சிக்குனியா மற்றும் வைரஸ் காய்ச்சல்களை பரப்பும் கொசு புழுக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடிதம் ந.க.எண். 1588 / 2015 / ஜே1, நாள் 15.06.2016 மற்றும் கடிதம் ந.க.எண். 2571 / ஜே1 / 2017 நாள் 14.02.2017ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நல்ல தண்ணீரில் உருவாகும் கொசு புழுக்களை கட்டுப்படுத்த தண்ணீரில் ஊற்றப்படும் கொசு புழு மருந்தான "Temephos Emulsifiable 50% " என்ற மருந்து இம்மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளிலும் வீடுகள் தோறும் உள்ள தண்ணீர் தொட்டி மற்றும் அனைத்து நீர்நிலைகளிலும் மேற்படி மருந்து ஊற்றி கொசு புழுக்களை கட்டுப்படுத்த தேவைப்படும் மேற்படி மருந்து இருப்பு குறைவாக இருப்பதால் பொது சுகாதார நலனை முன்னிட்டு மேற்படி மருந்தை தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.015/M [P] / INSECT – LARVI (II) / TNMSC / 2017 நாள் 14.11.2018ன் படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 2000 லிட்டர் மருந்தை வாங்கவும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.15.00 (GST உட்பட ) லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

இம்மாநகராட்சி கொசு தடுப்பு பணிக்கு கொசுபுழு மருந்தாக பயன்படும் "Temephos Emulsifiable 50% " என்ற மருந்து 2000 லிட்டரை மேற்கண்ட கடிதத்தின்படி தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கவும் மற்றும் அதற்காகும் மேற்கண்ட செலவீனத்திற்கும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( எச்.1/ 0688 / 2019)

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-----

**532)** இம்மாநகராட்சி பகுதிகளில் டெங்கு சிக்குனியா மற்றும் மலேரியா காய்ச்சல்களை பரப்பும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர், சென்னை–5 அவர்களின் கடிதம் ந.க.எண். 1588 / 2015 / ஜே1, நாள் 15.06.2015 மற்றும் கடிதம் ந.க.எண். 2571 / ஜே1 நாள் 15.06.2015 மற்றும் கடிதம் ந.க.எண். 2571 / ஜே1/2017 நாள் 14.02.2017ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சி பகுதிகளில் உள்ள சாக்கடை கால்வாய்கள், கழிவுநீர் தேக்கங்கள் தண்ணீர் தேங்கியுள்ள நீர்நிலைகள் மற்றும் கழிவுநீர் குழிகள் ஆகியவற்றில் உற்பத்தியாகும் கொசுக்கள் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த தேவைப்படும் கொசு மருந்தான Bacillus Turingensis Var IsraelensisW.P.என்ற மருந்து கொசு தடுப்பு பணிக்கு அவசியம் தேவைப்படுகிறது. மேற்படி மருந்தை தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.015/ M [P] / INSECT – LARVI (II) / TNMSC / 2017 நாள் 28.12.2018ன் படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் மூன்று மாதங்களுக்கு தேவைப்படும் 2000 கிலோ மருந்து வாங்கவும் மற்றும் இதற்காகும் செலவினம் ரூ.24.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

இம்மாநகராட்சி தேவையான மேற்படி கொசு புழு தடுப்பு Bacillus Turingensis Var Israelensis W.P. என்ற மருந்தை தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம், சென்னை அவர்களின்

**532–ன் தொடர்ச்சி**

கடிதம் ந.க.எண்.015 / M [P] / INSECT – LARVI (II) / TNMSC / 2017 நாள் 28.12.2018ன் படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கவும் மற்றும் அதற்காகும் செலவீனத்திற்கும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1/ 1104 / 2019)

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-----

**533)** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விதி 110ன் கீழ் 11.02.2019 அன்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிக்கையின்படி இம்மாநகராட்சி பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு சிறப்பு நிதி உதவியாக ரூ.2000/– வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு இணையதளத்தில் வறுமை கோட்டிற்கு கீழே உள்ள பயனாளிகளின் பட்டியலை பதிவிறக்கம் செய்து இதனை களஆய்வு செய்து சரிபார்க்கப்பட்டு தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் விபரத்தினை அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி மேற்கொள்ள வாடகை அடிப்படையில் கணிணிகள் மற்றும் பதிவிறக்கம் (ம) பதிவேற்றம் செய்ய பணியாளர்கள் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவை தேவைப்படுகிறது. எனவே இப்பணியினை அவசர அவசியம் கருதி உடன் முடிக்க வேண்டியிருப்பதால் திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 101 உட்பிரிவு 2 (பி) ன்படி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு 08.03.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ளபடி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் (ம) முகவரி | ஒப்பந்தப்புள்ளி மொத்த தொகை |
|---|---|---|
| 1. | திருவாளர்.Master Mind Engineering & IT Contractors,<br>No.13 / 54, Jayam Garden, Rakkiyapalayam,<br>Avinashi,<br>Tiruppur – 641 654. | ரூ. 11,97.410/– |
| 2. | திருவாளர். Shree Shayee Associates,<br>Tiruppur – 641 654. | ரூ.12,32,102/– |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்.Master Mind Engineering & IT Contractor அவினாசி என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 744 / 2019)

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-----

**534)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 1,3 மற்றும் 4 பகுதிகளில் அமைந்துள்ள கழிவுநீர் கால்வாய்கள் ஆங்காங்கே அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் செல்லமுடியாமல் இருப்பதால் கொசு உற்பத்தி ஏற்பட்டு தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும், இதனை உடன் சரிசெய்து அடைப்புகளை நீக்கி கழிவுநீர் தேங்காமல் செல்ல ஏதுவாக அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை அமர்த்தி மேற்படி பணிகளை மேற்கொள்ளலாம் என மாநகர் நல அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேற்படி அறிக்கையின் பேரில் ஆணையர் / தனி அலுவலர் அவர்களின் 04.03.2019ந் தேதியில் மேற்படி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட அறிக்கையின் அடிப்படையில் மேற்படி கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்ய தற்போது போதுமான அளவு துப்புரவு பணியாளர்கள் இல்லாததால் காலியாக உள்ள துப்புரவு பணியாளர்களுக்கு பதிலாக ஒப்பந்த அடிப்படையில் வெளிச்சந்தை முறையில் தினசரி 100 துப்புரவு பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் 01.04.2019 முதல் 31.07.2019 வரையுள்ள 120 நாட்களுக்கு பணியமர்த்தவும் இதற்கு செலவீனம் ரூ.44,55,000/– திருப்பூர் மாநகராட்சி சட்ட்ம் 2008 திருத்தப்பட்ட பிரிவு 101 உட்பிரிவு 2 (பி)ன்படி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு 28.07.2016ந் தேதிய ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் திருவாளர்கள் ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின் அடிப்படையில் 01.04.2019 முதல் 31.07.2019 வரையுள்ள 120 நாட்களுக்கு அதே விலை விகிதத்தில் மேற்படி ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கவும், அதற்காகும் செலவீனம் ரூ.44,55,000/– க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு தினசரி 100 துப்புரவு பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் 01.04.2019 முதல் 31.07.2019 வரை 120 நாட்களுக்கு பணியமர்த்தி கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (எச்.1 / 2104 / 2019)

–––––

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

–––––

**535)** திருப்பூர் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் வார்டு எண்.11, சாமுண்டிபுரம் ( ஈ.பி.காலனி) மாநகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.11,10,000/–க்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு தனி அலுவலர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி, 06.08.2018 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 20.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ | ஒப்பந்த விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு. C. ராமசாமி | 9,98,425/– | மதிப்பீட்டு விலையை விட 5.27% அதிகம். | இணைக்கப்பட்டுள்ளது. |
| 2. | திரு.T.திருமலைசாமி | 10,28,735/– | மதிப்பீட்டு விலையை விட 8.46% அதிகம். | இணைக்கப்பட்டுள்ளது. |

**535–ன் தொடர்ச்சி**

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக இருந்ததால், மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு C. ராமசாமி என்பவரிடம் இவ்வலுவலக கடிதம் எண்.183 / N /2018–19, நாள் 22.02.2019–ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 26.02.2019–ம் தேதிய கடிதத்தில் இனம் எண்.7–ல் ரூ.95/–க்கு பதிலாக ரூ.91/–க்கு விலைக் குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு. C. ராமசாமி (விலைக்குறைப்புக்கு பின்) | 9,95,669/– | மதிப்பீட்டு விலையை விட 4.98% அதிகம். |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 4.98% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மாமன்றம் ஏற்கலாம்.
2) அத்தியாவசியப் பணியாக உள்ளதால், பணியின் அவசர அவசியம் கருதியும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால், திருப்பூர் மாநகரில் கட்டிட கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப்பட்டியல் விலை விகிதத்தைவிட கூடுதலாகவும், மற்ற நகரங்களைக் காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.98% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
3) பணியின் அத்தியாவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் ஏற்கலாம். **( ம.எண். 183 / N / 2018–19)**

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-----

**536)** திருப்பூர் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் வார்டு எண்.14, சிறுபூலுவப்பட்டி பகுதியில் உள்ள சமுதாய கூடத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.10,75,000/–க்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு தனி அலுவலர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி, 20.11.2018 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 20.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ | ஒப்பந்த விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு. C. ராமசாமி | 9,77,463/– | மதிப்பீட்டு விலையை விட 5.34% அதிகம். | இணைக்கப்பட்டுள்ளது. |
| 2. | திரு.T.திருமலைசாமி | 10,01,812/– | மதிப்பீட்டு விலையை விட 7.96% அதிகம். | இணைக்கப்பட்டுள்ளது. |

**536–ன் தொடர்ச்சி**

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக இருந்ததால், மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு C. ராமசாமி என்பவரிடம் இவ்வலுவலக கடிதம் எண்.188 / N /2018–19, நாள் 22.02.2019–ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 26.02.2019–ம் தேதிய கடிதத்தில் இனம் எண்.11–ல் ரூ.100/–க்கு பதிலாக ரூ.86/–க்கு விலைக் குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு. C. ராமசாமி (விலைக்குறைப்புக்கு பின்) | 9,74,159/– | மதிப்பீட்டு விலையை விட 4.98% அதிகம். |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 4.98% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மாமன்றம் ஏற்கலாம்.
2) அத்தியாவசியப் பணியாக உள்ளதால், பணியின் அவசர அவசியம் கருதியும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால், திருப்பூர் மாநகரில் கட்டிட கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப்பட்டியல் விலை விகிதத்தைவிட கூடுதலாகவும், மற்ற நகரங்களைக் காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.98% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
3) பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, பணி ஆணை வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் ஏற்கலாம்.

(ம .எண். 188 / N / 2018–19)

–––––

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

–––––

**(ஒம்) க. சிவகுமார், எம்.ஏ.,**
**தனிஅலுவலர் (ம) ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையருக்காக,**
**திருப்பூர் மாநகராட்சி.**

## திருப்பூர் மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு . க. சிவகுமார் எம்.ஏ.,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

*****

**537)** மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 05.06.2018 அன்று சட்டபேரவையில் விதி 110ன் கீழ் தமிழகத்தில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்டு தூக்கி வீசிஎறியப்படும் நெகிழிப்பொருட்களை தடைசெய்யும் பொருட்டு 1986ம் ஆண்டு சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு சட்டம் (மைய சட்டம் 29/1986)ன்படி 01.01.2019 முதல் நடைமுறையில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்களை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், சேமித்து வைத்தல், பிரித்து அளித்தல், கையாளுதல் மற்றும் பயன்பாட்டினை தடைசெய்யும் அறிவிப்பினை வெளியிட்டார்கள் அதன் தொடர்ச்சியாக அரசு ஆணை நிலை எண் 84 நாள்:25.06.2018ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி நோக்கத்திற்காக அரசானது இந்திய அரசின் 1986ம் ஆண்டு பிப்ரவரி 10ம் தேதியிடப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் எண் 152(E) உடன் இணைந்த மைய சட்டம் 29 / 126ன்படி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி சட்ட நடைமுறைகளை இம்மாநகராட்சியில் நடைமுறை படுத்துவதற்கும் செயல்வடிவம் கொடுப்பதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையரக ந.க.எண் 44555 / 2013 / பி3 நாள்: 28.02.2019ம் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2008ம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்

| | | | |
|---|---|---|---|
| தமிழ்நாடு சட்டம் 27/2008 | 1 | 2008ம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டத்தின் 432ம் பிரிவு (இதன்பின் இந்த பகுதியில் 2008 சட்டம் என காட்டப்பட்டவாறு) 432ம் பிரிவு (30) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறு புகுத்தப்படுகிறது.<br>(30A) ஒருமுறை மட்டும் பயன்படுத்தி தூக்கி எறியப்படுகின்ற நெகிழியை சேமித்து வைத்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், கையாளுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிந்தளித்தல் போன்றவை தடைசெய்வதற்காக. | 432ம் பிரிவிற்கான திருத்தம் |
| | 2 | 2008ம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டத்தில் 434ம் பிரிவில் :<br>(1) 1 (a) 100 ரூபாய் மற்றும் 25 ரூபாய் எனும் சொற்றொடருக்காக 1000 ரூபாய் மற்றும் 250 ரூபாய் எனும் சொற்றொடராக திருத்தி அமைக்கப்படுகிறது.<br>(1) 1 (b) 20 ரூபாய் எனும் சொற்றொடருக்காக 200 ரூபாய் எனும் சொற்றொடராக திருத்தி அமைக்கப்படுகிறது. | 434ம் பிரிவிற்கான திருத்தம் |
| | 3 | 2008ம் ஆண்டு சட்டத்தில் 434ம் பிரிவிற்கு பின் பின்வரும் பிரிவு புகுத்தப்படுகிறது.<br>அதாவது 434- A ஒருமுறை மட்டும் பயன்படுத்தி தூக்கிவீசப்படுகின்ற நெகிழியை தடைசெய்வதற்காக இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டம் குறித்து.<br>432ஆம் பிரிவின் (30- A) கூறின்படி துணை விதியை இயற்றுகையில் 434 ஆம் பிரிவில் எது எவ்வாறு காணப்படினும், குழுவானது துணை விதிகளை மீறுகின்ற நபர் எவரும் VI-A ஆம் இணைப்பு பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள குழுவால் நிர்ணயம் செய்யலாகும் தொகைக்கு மிகாத பணத்தண்டம் என்ற முறையில் செலுத்துவதற்கு கடப்பாடு உடையவராதல் வேண்டும் என்பதற்கு வகை செய்யப்படுகிறது. நபர் நான்காவது முறையாக மீறுபவரால் இந்தச்சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள வணிக உரிமம் இரத்து செய்யப்படும். | 434- A புதிய பிரிவை புகுத்துதல் |
| | 4 | 2008ம் ஆம் ஆண்டு சட்டத்தின் VI ஆம் இணைப்புப் பட்டியலுக்கு பின்பு பின்வரும் இணைப்பு பட்டியல் – VI- A புகுத்தப்படுகிறது. | |

537–ன் தொடர்ச்சி

## இணைப்பு பட்டியல் – VI-A

### பிரிவு 432 (30–A)ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வ. எண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | ஒருமுறை மட்டும் பயன்படுத்தி தூக்கி வீசப்படும் நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.25000/– (இருபத்தைந் தாயிரம் ரூபாய்) | ரூ.50000/– (ஐம்பதாயிரம் ரூபாய்) | ரூ.100000/– (ஒரு இலட்சம் ரூபாய்) |
| 2 | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தி தூக்கி வீசப்படும் நெகிழியை பயன்படுத்துதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.10000/– (பத்தாயிரம் ரூபாய்) | ரூ.15000/– (பதினைந்தாயிரம் ரூபாய்) | ரூ.25000/– (இருபத்தைந் தாயிரம் ரூபாய்) |
| 3 | மளிகைக் கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர நிறுவனங்களில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தி விட்டு தூக்கி வீசப்படும் நெகிழியை பயன்படுத்துதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.1000/– (ஓராயிரம் ரூபாய்) | ரூ.2000/– (இரண்டாயிரம் ரூபாய்) | ரூ.5000/– (ஐந்தாயிரம் ரூபாய்) |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்களால் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.100/– (ஒரு நூறு ரூபாய்) | ரூ.200/– (இரு நூறு ரூபாய்) | ரூ.500/– (ஐநூறு ரூபாய்) |

## Amendments to the Tiruppur City Municipal Corporation Act 2008

| | | | |
|---|---|---|---|
| Tamiln adu Act 27 of 2008 | 1 | In section 432, of the Tiruppur City Municipal Corporation Act 2008, (Hereinafter in this part referred to as the 2008 act) after clause (30) the following clause now being inserted, namely-<br><br>“(30-A) for the prevention of storage supply, transport, sale and distribution of use and throwaway / single use plastics” | Amendment of section 432 |
| | 2 | In section 434 of 2008 Act:-<br>In clause (1) (a) for the expression “one hundred rupees” and “twenty five rupees” the expression “ One thousand rupees” and “two hundred and fifty rupees” respectively now being substituted:<br>In clause (1) (b) for the expression “twenty rupees” the expression ‘ Two hundred rupees now being substituted | Amendment of section 434 |
| | 3 | After section 434 of the 2008 act, the following section now being inserted, namely:-<br>“434-A penalty for breach of by-laws made for prevention of single use / use and throw away plastic – Not withstanding anything contained in section 434, in making a by-law under clause (30-A) of section 432, the council provided that any person who commits the breach thereof shall be liable to pay by way of penalty amount specified in schedule VI-A, If a person commits the breach for fourth time the Trade license issued under this Act will be cancelled. | Insertion of New Section 434A |
| | 4 | After Schedule VI of the 2008 Act, the following schedule now being inserted namely – schedule VI-A. | Insertion of new schedule VI-A |

537–ன் தொடர்ச்சி

## SCHEDULE VI-A

## Penalties for breach of by – laws made under section 432 (30-A)

| Sl.No | Offences | Fine for first time offence | Fine for Second time offence | fine for third time offence |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | Storage, supply, transport, sale and distribution of single use / use and throwaway plastics | Twenty Five Thousand Rupees | Fifty Thousand Rupees | One Lakh Rupees |
| 2 | Use, sale and distribution of single use / use and throwaway plastics in large commercial establishments like malls, textile shops and super markets etc. | Ten Thousand | Fifteen Thousand Rupees | Twenty Five Thousand Rupees |
| 3 | Use, Sale and distribution of Single use / use and throwaway plastics in medium commercial establishments like grocery shops pharmaceutical shops etc. | One Thousand Rupees | Two Thousand Rupees | Five Thousand Rupees |
| 4 | Use, Sale and distribution of single use / use and throwaway plastic in small commercial vendors etc., | One Hundred Rupees | Two Hundred Rupees | Five Hundred Rupees |

இதன் அடிப்படையில் மேற்கண்டவாறு திருத்தங்கள் மேற்கொண்டதை மாமன்ற அனுமதி பெற்று மாவட்ட அரசிதழில் வெளியிட்டு இதனை நடைமுறைக்கு கொண்டு வர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 0806/ 2019)

------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

-----

**538)** தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மை திட்டநிதியின்கீழ் திருப்பூர் மாநகராட்சிக்கு 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஜெட்ராடிங் வாகனம் 1 எண்ணிக்கை விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண். K.DIS. No 26788 / P3 / 2018, நாள். 29.10.2018 வாயிலாக ரூ.16.00 இலட்சம் மதிப்பிட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டதையடுத்து, மேற்படி பணிக்கு 31.12.2018 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி 31.12.2018 அன்று M/s. Rock and Arch Constructions (I) Pvt Ltd, Erode. M/s. S.P.Builders, Chennai மற்றும் M/s. IOTA Engineering Corporation, Gurgaon ஆகிய மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தன.

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை திறப்பு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் M/s. Rock and Arch Constructions (I) Pvt Ltd, Erode மற்றும் M/s. S.P.Builders, Chennai ஆகிய இரண்டு நிறுவனங்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s. Rock and

**538–ன் தொடர்ச்சி**

Arch Constructions (I) Pvt Ltd, Erode மற்றும் M/s. S.P.Builders, Chennai ஆகிய இரண்டு நிறுவனங்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை 04.02.2019 அன்று திறப்பு செய்யப்பட்டு, ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ( GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | M/s. Rock and Arch Constructions (I) Pvt Ltd, Erode. | Rs.16,67,800/- | மதிப்பீட்டுத் தொகையை விட 4.24 % அதிகமாகும் | செலுத்தியுள்ளனர் |
| 2 | M/s. S.P.Builders, Chennai. | Rs. 52,28,000/- | மதிப்பீட்டுத் தொகையை விட 226.75 %அதிகமாகும் | செலுத்தியுள்ளனர் |

ஒப்பு நோக்குப்பட்டியல்படி மேற்கண்ட இரண்டு நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Rock and Arch Constructions (I) Pvt Ltd, Erode நிறுவனத்தார் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.Rs.16,67,800/- என்பது மதிப்பிட்டுத் தொகையைவிட 4.24% அதிகமாக உள்ளதால் விலைகுறைப்பு செய்ய மேற்கண்ட நிறுவனத்தாரிடம் கோரலாம் என ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வுக்குழுவால் 08-02-2019ல் முடிவு செய்யப்பட்டது.

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த M/s. Rock and Arch Constructions (I) Pvt Ltd, Erode நிறுவனத்திடம் இவ்வலுவக கடிதம் எண் Roc No E3 / 2755 / 2018. நாள் 08.02.2019 ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைகுறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் தங்களது 07-03-2019ம் தேதிய கடிதத்தில் ரூ.16,67,800/-க்கு பதிலாக ரூ.16,00,000/-க்கு விலைகுறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளனர். மேற்படி விலைகுறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்குபட்டியல் தயாரிக்கப்பட்டது. அதன் விபரம் வருமாறு:–

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | ஒப்பந்தப்புள்ளி விகிதம் விலைகுறைப்புக்கு பின் |
|---|---|---|---|
| 1 | M/s. Rock and Arch Constructions (I) Pvt Ltd, Erode. **(விலைகுறைப்புக்கு பின்)** | ரூ. 16,00,000/- | 0 % மதிப்பீட்டுத் தொகைக்கு சமமாகும் |

மேற்படி நிறுவனத்தாரின் விலைவிகிதம் விலைகுறைப்புக்குபின் மதிப்பீட்டுத் தொகைக்கு சமமாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து மேற்படி ஒப்பந்தப்புள்ளி தனிஅலுவலர் அவர்களின் அதிகாரத்திற்குட்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1) பதிவு செய்யலாம்.

**2)** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் கடிதம் எண்.253/இஎல்இசி/08/2, நாள்.01.09.2008 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.258, நாள்.26.08.2008ல் தெரிவிக்கப்பட்டுள்ள மாநகராட்சி சட்ட திருத்த விதிகளின்படி (99,100 மற்றும் 101ன்படி)

**3)** மற்றும் மாமன்ற தீர்மானம் எண்.14, நாள்.30.12.2016ன்படி, தனிஅலுவலர் அவர்களின் அதிகாரவரம்பிற்குட்பட்டு மேற்படி பணிக்கு வரப்பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அனுமதிக்கலாம். **( E3 / 2755/ 2018)**

**------**

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**-----**

**539)** தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மை திட்டநிதியின்கீழ் திருப்பூர் மாநகராட்சிக்கு 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஜெட்ராடிங் வாகனம் 1 எண்ணிக்கை விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண். K.DIS. No 26788 / P3 / 2018, நாள். 29.10.2018 வாயிலாக ரூ.49.00 இலட்சம் மதிப்பிட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டதையடுத்து, மேற்படி பணிக்கு 31.12.2018 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி 31.12.2018 அன்று M/s. Rock and Arch Constructions (I) Pvt Ltd, Erode, M/s. Vishnu Infrastructures, Coimbatore மற்றும் M/s. IOTA Engineering Corporation, Gurgaon ஆகிய மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தன.

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை திறப்பு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் M/s. Rock and Arch Constructions (I) Pvt Ltd, Erode மற்றும் M/s. Vishnu Infrastructures, Coimbatore ஆகிய இரண்டு நிறுவனங்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s. Rock and Arch Constructions (I) Pvt Ltd, Erode மற்றும் M/s. Vishnu Infrastructures, Coimbatore ஆகிய இரண்டு நிறுவனங்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை 04.02.2019 அன்று திறப்பு செய்யப்பட்டு, ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ( GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | M/s. Rock and Arch Constructions (I) Pvt Ltd, Erode. | Rs.51,25,400/- | மதிப்பீட்டுத் தொகையை விட 4.60 % அதிகமாகும் | செலுத்தியுள்ளனர் |
| 2 | M/s. Vishnu Infrastructures, Coimbatore | Rs.52,76,800/- | மதிப்பீட்டுத் தொகையை விட 7.69 % அதிகமாகும | செலுத்தியுள்ளனர் |

ஒப்பு நோக்குப்பட்டியல்படி மேற்கண்ட இரண்டு நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Rock and Arch Constructions (I) Pvt Ltd, Erode நிறுவனத்தார் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.51,25,400/-என்பது மதிப்பிட்டுத் தொகையை விட 4.60 % அதிகமாக உள்ளதால் விலைகுறைப்பு செய்ய மேற்கண்ட நிறுவனத்தாரிடம் கோரலாம் என ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வுக்குழுவால் 08-02-2019ல் முடிவு செய்யப்பட்டது.

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த M/s. Rock and Arch Constructions (I) Pvt Ltd, Erode நிறுவனத்திடம் இவ்வலுவக கடிதம் எண் Roc No E3 / 2755 / 2018. நாள் 08.02.2019 ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைகுறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் தங்களது 07-03-2019ம் தேதிய கடிதத்தில் ரூ.51,25,400/-க்கு பதிலாக ரூ.49,00,000/-க்கு விலைகுறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளனர். மேற்படி விலைகுறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்குபட்டியல் தயாரிக்கப்பட்டது. அதன் விபரம் வருமாறு:-

539–ன் தொடர்ச்சி

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | ஒப்பந்தப்புள்ளி விகிதம் விலைகுறைப்புக்கு பின் |
|---|---|---|---|
| 1 | M/s. Rock and Arch Constructions (I) Pvt Ltd, Erode. **(விலைகுறைப்புக்கு பின்)** | ரூ. 49,00,000/- | 0 % மதிப்பீட்டுத் தொகைக்கு சமமாகும் |

மேற்படி நிறுவனத்தாரின் விலைகுறைப்புக்குபின் மதிப்பீட்டுத் தொகைக்கு சமமாக இருக்கும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என பார்வை 2ல் காணும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதை அடுத்து மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. உத்திரவிற்காக.

**அலுவலகக் குறிப்பு:**

**1)** ஒப்புதல் அளிக்கலாம்.

**2)** மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் விநியோக உத்திரவு வழங்கியதை ஏற்கலாம். **(E3/2755/2018)**

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-----

**540)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 2க்குட்பட்ட பகுதியில் சேகரமாகும் குப்பைகளை மும்மூர்த்தி நகர் பயனற்ற பாறைகுழியில் கொட்டப்பட்டு வருகிறது.

மேற்காணும் இடத்தில் கொட்டப்பட்ட குப்பைகளை உள்ளே தள்ளி மேலாண்மை செய்வதற்கு குப்பைகளை தள்ளும் வாகனம் (Chain Dozer ) ஒன்று அவசரமாக தேவைப்படுவதை உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியற் துறை, ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி அடிப்படையில் ஒரு மணி நேரத்திற்கு ரூ.840/– வீதம் ( நாள் ஒன்றுக்கு 8 மணி நேரத்திற்கு மிகாமல் ரூ.6720/–) நான்கு மாதங்களுக்கு Chain Dozer வாகனம் மூலம் மேற்படி பணியினை 01.12.2018ம் தேதி முதல் 31.03.2019 வரை பயன்படுத்திக் கொள்ளவும், இதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.4.00 இலட்சத்திற்கு திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 15ன்படி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள ளாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு குப்பைகளை பாறைகுழியில் தள்ளி மேலாண்மை செய்ய மேற்கண்ட விலைப்புள்ளியின் அடிப்படையில் குப்பை தள்ளும் வாகனம் (ChainDozer) ஒன்றை 01.12.2018 முதல் 31.03.2019 வரை பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ.1 / 4118 / 2018 / ம.2)

-----

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-----

**(ஓம்) க. சிவகுமார், எம்.ஏ.,**
**தனிஅலுவலர் (ம) ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையருக்காக,**
**திருப்பூர் மாநகராட்சி.**